කාලගුණ විද්‍යා දෙපාර්තමේන්තුව
வளிமண்டலவியல் திணைக்களம்
Department of Meteorology

TP : 011 2686686
Fax : 011 2691443
E-mail : metnmc@gmail.com
Web : www.meteo.gov.lk

இல. SF - 2021 - 09

# 2021 செப்டம்பர் மாதத்திலிருந்து நவம்பர் மாதம் வரையான பருவகால, மாதாந்த மற்றும் வாராந்த மழைவீழ்ச்சி முன்னறிவிப்பும் வெப்பநிலை முன்னறிவிப்பும்

இலங்கை வளிமண்டலவியல் திணைக்களத்தின் பருவகால முன்னறிவிப்புப் பிரிவால் 2021 ஓகஸ்ட் 30ஆம் திகதி வெளியிடப்பட்டது.

**இலங்கைக்கான செப்டம்பர், ஒக்டோபர், நவம்பர் (SON) பருவகாலத்திற்கான இந்த கருத்தொருமித்த காலநிலைக் கண்ணோட்டமானது இலங்கையின் காலநிலை மீது தாக்கம் செலுத்துகின்ற பூகோள காலநிலை நிலைமைகள் மற்றும் உலகளாவிய ரீதியிலான பல்வேறு காலநிலை மாதிரிகளிலிருந்தான பருவகால முன்னறிவிப்புகளின் மதிப்பீடுகளினூடாக விருத்தி செய்யப்பட்டுள்ளது. எல் நினோ தென் ஊசலாட்டம் (ENSO) நிலைமை நடுநிலையாக காணப்படுவதுடன், இந்த நடுநிலையான ENSO நிலைமை வட அரைக்கோள கோடை காலம் முழுவதும் தொடரும் சாத்தியம் காணப்படுவதுடன், (ஜூலை - செப்டம்பர் காலப்பகுதியில் ~60% ஆன சாத்தியம்) La Niña நிலைமை ஓகஸ்ட் - ஒக்டோபர் பருவகாலத்தில் ஆரம்பமாவதுடன் 2021 - 22 குளிர்காலத்திலும் (நவம்பர் - ஜனவரி காலப்பகுதியில் ~70% ஆன சாத்தியம்) தொடரும் சாத்தியம் காணப்படுகின்றது. இந்து சமுத்திர இருமுனை நிலைமை (IOD) சுட்டிப் பெறுமதியானது மே மத்தியிலிருந்து அதன் எதிர்மறை எல்லையை விடவும் (−0.4 °C) குறைவாகக் காணப்படுகின்றது. IOD சுட்டிப் பெறுமதியானது 2021 டிசம்பர் வரை எதிர்மறையான பெறுமதிகளுடன் நிலைத்திருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.**

## 2021 செப்டம்பர் மாதத்திலிருந்து ஒக்டோபர் மாதம் வரையான (SON) பருவகால மழைவீழ்ச்சி தொடர்பான முன்னறிவிப்பு



உரு 1: செப்டம்பர், ஒக்டோபர், நவம்பர் (SON) பருவகாலத்திற்கான கருத்தொருமித்த சாத்தியமான மாதாந்த மழைவீழ்ச்சி தொடர்பான முன்னறிவிப்பு

**2021 செப்டம்பர் - நவம்பர் (SON) பருவகாலத்தில் நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் சாதாரண அளவை விட குறைவான மழைவீழ்ச்சிக்கான சாத்தியம் காணப்படுவதுடன், வடக்கு மாகாணத்தில் சாதாரண அளவை அண்மித்த மழைவீழ்ச்சிக்கான சாத்தியம் காணப்படுகின்றது.**
(உரு 1)

**2021 செப்டம்பர், ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களுக்கான மாதாந்த மழைவீழ்ச்சி தொடர்பான முன்னறிவிப்பு**

| **மாதம்** | **மழைவீழ்ச்சி முன்னறிவிப்பு** |
|---|---|
| **செப்டம்பர் 2021**  | 2021 செப்டம்பர் மாதத்தில் நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் சாதாரண அளவை அண்மித்த மழைவீழ்ச்சிக்கான சாத்தியம் காணப்படுகின்றது. |
| **ஒக்டோபர் 2021**  | 2021 ஒக்டோபர் மாதத்தில் சாதாரண அளவை விட குறைவான மழைவீழ்ச்சிக்கான சாத்தியம் உயர்வாகக் காணப்படுகின்றது. எனினும் இலங்கையிலும் சூழவுள்ள பகுதிகளிலும் குறைந்த அழுத்தப் பிரதேசம் உருவாகக் கூடிய சாத்தியம் காணப்படுவதுடன், இது 2021 ஒக்டோபர் மாதத்தில் நாட்டில் மழைவீழ்ச்சியை அதிகரிக்கக் கூடும். |
| **நவம்பர் 2021**  | 2021 நவம்பர் மாதத்தில் சாதாரண அளவை விட குறைவான மழைவீழ்ச்சிக்கான சாத்தியம் காணப்படுகின்றது. எனினும் இலங்கையிலும் சூழவுள்ள பகுதிகளிலும் குறைந்த அழுத்தப் பிரதேசம் உருவாகக் கூடிய சாத்தியம் காணப்படுவதுடன், இது 2021 நவம்பர் மாதத்தில் நாட்டில் மழைவீழ்ச்சியை அதிகரிக்கக் கூடும். |

உரு 2: 2021 செப்டம்பர், ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களுக்கான மாதாந்த மழைவீழ்ச்சி தொடர்பான முன்னறிவிப்பு

*மாவட்ட ரீதியான சாதாரண (சராசரி) மழைவீழ்ச்சிப் பெறுமதிகள் இணைப்பு 1 இல் காட்டப்பட்டுள்ளன.*

எனினும் இந்த எதிர்வுகூறலானது பலமான, நாளாந்தம் உருவாகக் கூடிய குறைந்த அழுத்தங்கள் மற்றும் தாழமுக்கங்கள் போன்ற தொகுதி மாற்றங்கள் மற்றும் மடென் ஜூலியன் ஊசலாட்டம் (MJO) போன்ற பருவகாலங்களுக்கு இடைப்பட்ட ஊசலாட்டங்கள் காரணமாகவும் வேறுபடலாம்.

## 2021 செப்டம்பர் மாதத்திற்கான வாராந்த மழைவீழ்ச்சி தொடர்பான முன்னறிவிப்பு

| வாராந்த மழைவீழ்ச்சி ஒழுங்கீனம்<br>மூலம் - ECMWF<br>2021 ஒகஸ்ட் 26ஆம் திகதி இற்றைப்படுத்தப்பட்டது.<br><br> | |
|---|---|
| <br>ஓக 30-05 செப் 2021 | வட மாகாணம் தவிர்ந்த நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் சாதாரண அளவை விட குறைவான மழைவீழ்ச்சிக்கான சாத்தியம் காணப்படுவதுடன், வட மாகாணத்தில் சாதாரண அளவை அண்மித்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. |
| <br>06-12 செப் 2021 | நாட்டின் தென்மேற்குப் பகுதியில் சாதாரண அளவை விட குறைவான மழைவீழ்ச்சிக்கான சாத்தியம் காணப்படுவதுடன், நாட்டின் ஏனைய பிரதேசங்களில் சாதாரண அளவை அண்மித்த அல்லது சாதாரண அளவை விட சற்றுக் குறைவான மழைவீழ்ச்சிக்கான சாத்தியம் காணப்படுகின்றது. |

| | |
|---|---|
|  13-19 செப் 2021 | நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் சாதாரண அளவை அண்மித்த மழைவீழ்ச்சிக்கான சாத்தியம் |
|  20-26 செப் 2021 | நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் சாதாரண அளவை அண்மித்த மழைவீழ்ச்சிக்கான சாத்தியம் காணப்படுவதுடன், நாட்டின் வடமேற்குப் பகுதியில் சாதாரண அளவை விட சற்றுக் குறைவான மழைவீழ்ச்சிக்கான சாத்தியம் காணப்படுகின்றது. |

உரு 3: 2021 செப்டம்பர் மாதத்திற்கான வாராந்த மழைவீழ்ச்சி தொடர்பான முன்னறிவிப்பு

## 2021 ஓகஸ்ட் மாதத்தில் அவதானிக்கப்பட்ட அசாதாரண மழைவீழ்ச்சி

2021 ஓகஸ்ட் மாதத்தில் அவதானிக்கப்பட்ட அசாதாரண மழைவீழ்ச்சியானது திணைக்களத்தின் இணையத்தளத்தில் 2021 செப்டம்பர் 2ம் திகதியளவில் இற்றைப்படுத்தப்படும்.
http://meteo.gov.lk/index.php?option=com_content&view=article&id=78&Itemid=290&lang=en

## 2021 செப்டம்பர் மாதத்திற்கான சாத்தியமான வெப்பநிலை முன்னறிவிப்பு

2021 செப்டம்பர் மாதத்திற்கான சாத்தியமான வெப்பநிலை முன்னறிவிப்பு கீழே தரப்பட்டுள்ளது.



*உரு 5*



*உரு 6*




உரு 5 இலங்கையில் 2021 செப்டம்பர் மாதத்திற்கான சாத்தியமான உச்ச வெப்பநிலை முன்னறிவிப்பைக் காட்டுகின்றது. அதற்கிணங்க 2021 செப்டம்பர் மாதத்தில் வவுனியா, அனுராதபுரம், புத்தளம், குருநாகல், கொழும்பு, கம்பஹா, இரத்தினபுரி, கண்டி, நுவரெலியா, பதுளை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் சாதாரண (பகல்) உச்ச வெப்பநிலை அளவை விட சற்றுக் குறைந்த வெப்பநிலைக்கான சாத்தியம் காணப்படுவதுடன், ஹம்பாந்தோட்டை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் சாதாரண (பகல்) உச்ச வெப்பநிலை அளவை விட சற்று உயர்வான வெப்பநிலைக்கான சாத்தியம் காணப்படுகின்றது.

உரு 6 இலங்கையில் 2021 செப்டம்பர் மாதத்தில் சாத்தியமான குறைந்த (இரவு) வெப்பநிலை முன்னறிவிப்பைக் காட்டுகின்றது. அதற்கிணங்க 2021 செப்டம்பர் மாதத்தில் கொழும்பு, கம்பஹா, ஹம்பாந்தோட்டை, இரத்தினபுரி, கண்டி, நுவரெலியா, அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் சாதாரண குறைந்த வெப்பநிலை அளவை விட சற்று உயர்வான வெப்பநிலைக்கான சாத்தியம் காணப்படுவதுடன், வவுனியா, அனுராதபுரம், புத்தளம், குருநாகல், பதுளை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் சாதாரண குறைந்த வெப்பநிலை அளவை விட குறைவான வெப்பநிலைக்கான சாத்தியம் காணப்படுகின்றது.

**குறிப்பு: நீண்ட கால வெப்பநிலை அவதானிப்பு தரவுகள் கிடைக்காமை காரணமாக கேகாலை, மாத்தறை, மாத்தளை, முல்லைத்தீவு, கிளிநொச்சி, பொலன்னறுவை, மொனராகலை, யாழ்ப்பாணம் மற்றும் களுத்துறை மாவட்டங்களுக்கான வெப்பநிலை முன்னறிவிப்பு காணப்படவில்லை.**

**பின்வரும் பிரிவுகளில் அவதானம் தேவைப்படுகின்றது**

- அதிகாரமிக்க நிறுவனங்களால், குறிப்பாக விவசாயம், நீர்வளங்கள் மற்றும் வானிலையுடன் தொடர்பான அனர்த்தங்கள் குறித்து விடுக்கப்படும் அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்துமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு 1: மாவட்ட ரீதியான 30 வருடங்களுக்கான (1961-1990) செப்டம்பர், ஒக்டோபர் மற்றும் நவம்பர் பருவகாலத்தில் காணப்பட்ட சாதாரண (சராசரி) மழைவீழ்ச்சி**

| **மாவட்டம்** | **சராசரி மழைவீழ்ச்சி (மி.மீ) (செப்டம்பர்)** | **சராசரி மழைவீழ்ச்சி (மி.மீ) (ஒக்டோபர்)** | **சராசரி மழைவீழ்ச்சி (மி.மீ) (நவம்பர்)** |
|---|---|---|---|
| கொழும்பு | 289.7 | 391.7 | 340.8 |
| களுத்துறை | 388.1 | 463.7 | 403.1 |
| காலி | 341.2 | 420.3 | 378.9 |
| மாத்தறை | 258.6 | 328.2 | 352.7 |
| ஹம்பாந்தோட்டை | 72.4 | 174.3 | 222.5 |
| அம்பாறை | 77.2 | 172.3 | 271.9 |
| மட்டக்களப்பு | 86.6 | 182.2 | 303.2 |
| திருகோணமலை | 109.9 | 208.1 | 303.1 |
| முல்லைத்தீவு | 83.4 | 200.8 | 312.5 |
| யாழ்ப்பாணம் | 63.0 | 227.4 | 324.8 |
| கிளிநொச்சி | 60.9 | 211.0 | 329.6 |
| மன்னார் | 46.1 | 185.3 | 242.8 |
| புத்தளம் | 67.5 | 231.2 | 233.2 |
| கம்பஹா | 232.3 | 362.5 | 313.1 |
| கேகாலை | 360.6 | 460.9 | 394.1 |
| இரத்தினபுரி | 284.1 | 371.5 | 370.2 |
| மொனராகலை | 83.8 | 237.4 | 289.6 |
| பதுளை | 118.2 | 270.9 | 327.3 |
| பொலன்னறுவை | 100.3 | 217.7 | 292.9 |
| வவுனியா | 97.5 | 228.2 | 272.3 |
| அனுராதபுரம் | 83.0 | 226.1 | 240.4 |
| குருநாகல் | 116.6 | 288.6 | 270.1 |
| மாத்தளை | 94.3 | 260.4 | 309.0 |
| கண்டி | 189.6 | 309.7 | 342.5 |
| நுவரெலியா | 250.8 | 315.6 | 305.9 |

அட்டவணை 01: மாவட்ட ரீதியான 30 வருடங்களுக்கான (1961-1990) செப்டம்பர், ஒக்டோபர் மற்றும் நவம்பர் பருவகாலத்தில் காணப்பட்ட சாதாரண (சராசரி) மழைவீழ்ச்சி

அட்டவணை 01 இல் மாவட்ட ரீதியாக ஒவ்வொரு மாவட்டத்திலும் 30 வருடங்களுக்கான (1961-1990) செப்டம்பர், ஒக்டோபர் மற்றும் நவம்பர் பருவகாலத்தில் காணப்பட்ட சாதாரண (சராசரி) மழைவீழ்ச்சி காட்டப்பட்டுள்ளது.